CC 26/2018

Date : 29.05.2026.

PW-6 Anand, S/o.Nagaraj, aged 38 years

(Accused and his counsel present)

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. எனது முதல் விசாரணையில் ஆய்வாளர் என்னை கோயம்புத்தூரில் உள்ள யூனியன் பேங்க் ஆப் இந்தியாவில் மேலாளரரிடம் ஆவணங்களை பெற்று வரச்சொல்லி ஒரு வேண்டுகோள் கடிதம் கொடுத்ததாக கூறியதற்கு அந்த கடிதம் எந்த தேதியில் ஆய்வாளர் எனக்கு கொடுத்தார், நான் மேலாளரிடம் எந்த தேதியில் அதை கொடுத்தேன் என்றால் 04.01.2017ம் தேதி ஆய்வாளர் கடிதம் கொடுத்தார், நான் அதே தேதியில் அதை கொண்டுசென்று வங்கி மேலாளரிடம் கொடுத்தேன். என்னை ஆய்வாளர் விசாரிக்கும் போது 08.01.2016ம் தேதி இரவு 19.00 மணிக்கு நிலையம் வந்து ஒப்படைத்தேன் என்று எனது போலிஸ் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் நான் 04.01.2017ம் தேதியில் தான் கடிதம் கொடுத்தேன்.

2. நான் மேலாளரிடம் பெற்று வந்த ஆவணங்களை ஆய்வாளர் என்னிடமிருந்து படிவம் –91 மூலம் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல, படிவம் –91 ல் தான் கைப்பற்றினார். நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றும், அவ்வாறு ஆய்வாளர் படிவம் –91 தயார் செய்திருந்தால் அதை ஒரு ஆவணமாக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பார் என்றால் சரியல்ல. ஆய்வாளர் என்னிடம் எந்தவொரு வேண்டுகோள் கடிதமும் கொடுக்கவில்லை என்றும், அவ்வாறு கொடுத்திருந்தால் நான் அதற்கான ஒப்புகை சீட்டு பெற்று வந்து ஆய்வாளரிடம் கொடுத்து அதை ஒரு ஆவணமாக இவ்வழக்கில் தாக்கல் செய்திருப்பார்கள் என்று சொன்னால் சரியல்ல.

3. பொதுவாக ஒரு மாவட்டத்திலிருந்து மற்றொரு மாவட்டத்திற்கு அலுவல் சம்பந்தமாக செல்லும் போது அதற்காக பஸ் வாரண்ட் மற்றும்

பாஸ்போர்ட் பெற்றுக்கொண்டு தான் செல்வோம் என்றால் சில சமயம் இருசக்கர வாகனத்திலும் செல்வோம். அவ்வாறு செல்வதற்கு எங்களுக்கு எவ்வித அனுமதியும் கிடையாது என்றும், நாங்கள் பஸ் வாரண்ட் மற்றும் பாஸ்போட் வாங்கித்தான் செல்ல வேண்டும் என்றால் சரியல்ல. நான் உண்மையில் அன்றைய தேதியில் மேலாளரை சந்தித்திருந்தால் எனக்கு பஸ் வாரண்ட் மற்றும் பாஸ்போட் வழங்கப்பட்டிருக்கும் என்றும், எனக்கு கொடுக்கப்பட்ட அந்த பஸ் வாரண்ட் மற்றும் பாஸ்போட்டை இவ்வழக்கில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல.

4. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் நான் எந்த மேலாளரையும் சந்திக்கவில்லை என்றும், அவரிடமிருந்து எந்தவொரு ஆவணத்தையும் பெறவில்லை என்றும், அவ்வாறு பெற்றிருந்தால் அந்த ஆவணங்கள் நீதிமன்றத்தில் ஆவணங்களாக குறியீடு செய்யப்பட்டிருக்கும் என்றும், நான் பெற்று வராததால் தான் நீதிமன்றத்தில் அவ்வாறு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கை எனது ஆய்வாளர் பதிவு செய்ததால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

Sd/- Tmt.R.Geetha B.A. B.L.,
Judicial Magistrate (FAC),
Coonoor.